தினமணி

**வேளாண் இடுபொருட்கள் பொங்கலுக்குள் இருப்பு வைக்க அரசு உத்தரவு**

First Published : 02 Dec 2010 03:35:20 AM IST

சென்னை, டிச. 1: வேளாண் இடுபொருட்களை அவற்றை விற்பனை செய்யும் மையங்களில் பொங்கலுக்குள் இருப்பு வைத்து விநியோகிக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து, வேளாண்மைத் துறை செயலாளர் ராமமோகன ராவ் வெளியிட்டுள்ள உத்தரவு:

விவசாயப் பணிகளுக்கு தரமான விதைகள், உயிர் உரங்கள், ரசாயன உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள் மற்றும் மருந்துகள், இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள், சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் போன்றவற்றை உரிய காலத்தில் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு வெகு அருகில் கிடைக்கும் வகையில் உரிய மையத்தில் இருப்பு வைக்க வேண்டும்.

இடுபொருட்களை வேளாண் விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், வேளாண் ஆலோசனை மையங்கள், அரசு விதைப் பண்ணைகள், கிராம ஊராட்சி மையங்கள், அரசு விதைப் பண்ணைகள், கிராம ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் இதர அரசு மற்றும் கூட்டுறவு அலுவலகங்கள் போன்ற மையங்களின் மூலமாக வழங்க வேண்டும்.

நடமாடும் இடுபொருள் வழங்கும் மையங்களில் இருப்பு வைத்தும் இந்த இடுபொருட்களை வழங்கலாம். இடுபொருட்களை உரிய அலுவலர்களின் முன்அனுமதி பெற்று இருப்பு வைத்து விநியோகிக்க வேண்டும். இந்தப் பணிகளை வரும் ஜனவரி 15-க்குள் (பொங்கல் பண்டிகை) முடிக்க வேண்டும்.

இடுபொருட்களை விநியோகிப்பதற்கான தினத்தை முன்கூட்டியே ஊடகங்கள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், தண்டோரா போன்றவைகள் மூலம் விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

கிராமவாரியான இடுபொருள் வழங்கும் பணி பல்வேறு காலகட்டங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படாமல் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட கிராமங்களில் இடுபொருட்கள் வழங்கும் வகையில் திட்டமிட வேண்டும் என்று வேளாண்மைத் துறை செயலாளர் ராமமோகன ராவ் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

**ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டும் புதிய பயிர் சுழற்சி முறை**

First Published : 02 Dec 2010 01:17:19 AM IST

காஞ்சிபுரம்: புதிய பயிர் சுழற்சி முறையை பின்பற்றி விவசாயம் செய்யும் விவசாயிகள் ஆண்டு முழுவதும் தங்கள் நிலத்தில் இருந்து வருமானம் பெறலாம். விவசாயிகள் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 1 லட்சம் வரை லாபம் சம்பாதிக்க கூடிய வாய்ப்புகள் இருப்பதாக விவசாயத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

÷விவசாயிகள் அதிக லாபம் பெறுவதற்கு புதிய பயிர் சுழற்சி முறையை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல வேளாண்மைத் துறை அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

÷நெல்லானது, ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை விளைவதற்கு ஏற்ற பருவத்தைக் கொண்டது. மக்காச்சோளம், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் நல்ல விளைச்சலைத் தரும். ÷இதேபோல் பயறு வகைகளில் ஏப்ரல்-மே மாதங்களில் நல்ல விளைச்சலை தரும். இந்த மூன்று வகை பயிர்களையும் மாற்றி மாற்றி விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம்.

÷இந்த மூன்று வகையான பயிர்களையும் விவசாயிகள் பயிர் செய்தால் ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதுடன், ஒரே விதமான சத்துக்கள் மண்ணில் இருந்து உறிஞ்சப்படாமல் பயிற்சி சுழற்சி முறையின் காரணமாக மண்ணின் வளம் பாதுகாக்கப்பட்டு விளைச்சலும் பெருகும்.

÷குறிப்பாக ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பயிர் செய்யப்படும் நெல் 110 நாள்கள் முதல் 135 நாள்களில் விளைந்து பலனைக் கொடுக்கும்.

÷நெல் பயிருக்கு உழவு, உரம் செலவு, கூலி எல்லாம் சேர்த்து ரூ. 18 ஆயிரம் செலவாகும். ஒரு ஹெக்டேருக்கு 6 ஆயிரம் கிலோ நெல் கிடைத்தால், இதன் மூலம் ரூ. 36 ஆயிரம் வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

÷இதில் லாபம் மட்டும் ரூ. 18 ஆயிரம். நெல்லின் ரகத்துக்கு தகுந்தாற்போல் இந்த லாப மதிப்பு கொஞ்சம் கூடலாம், குறையலாம்.

÷அடுத்து டிசம்பர்-ஜனவரி மாதங்களில் அதே நிலங்களில் மக்காச்சோளத்தை பயிர் செய்யலாம். இவை 85 நாள் முதல் 100 நாள்களில் வளர்ந்து விளைச்சலைக் கொடுக்கும். ÷ஒரு ஹெக்டேருக்கு 5 ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ ரூ. 7.50 என்றால் கூட இதன் மூலம் ரூ. 37 ஆயிரத்து 500 வருமானம் கிடைக்கும். இதற்கு ஆகும் செலவு ரூ. 8 ஆயிரம் மட்டுமே.

÷இப் பருவம் முடிந்ததும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பயறு வகை பயிர்களான உளுத்தம் பயிறு, பைத்தம் பயிறு ஆகியவற்றை பயிர் செய்யலாம். ஒரு ஹெக்டேருக்கு 1,500 கிலோ வரை பயறு வகை பயிர்களை உற்பத்தி செய்ய முடியும்.

÷இதன் மூலம் ரூ. 60 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும். இதில் லாபம் மட்டும் ரூ. 52 ஆயிரத்து 500 கிடைக்கும் என்று விவசாய வல்லுநர்கள் கூறுகின்றனர்.

÷இது குறித்து காஞ்சிபுரம் வேளாண்மைத் துறை அலுவலர்கள் சிலரிடம் கேட்டபோது, "விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்க வேண்டும் மற்றும் மண்ணின் வளமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இப் புதிய பயிர் சுழற்சி முறையை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல விவசாயத் துறை இணை இயக்குநர் விஜயகுமார் தலைமையில் நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

÷விவசாயிகள் மத்தியிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறோம் என்றனர்.

**நீர் தேங்கியுள்ள பயிர்களைப் பாதுகாக்க வேளாண்துறை ஆலோசனை**

First Published : 02 Dec 2010 01:16:32 AM IST

சிதம்பரம்: வடிகால் வசதி இல்லாத பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நெற்பயிர் பாதிக்கப்படலாம். மேலும் பூச்சி, பூஞ்சாணங்களால் நெற்பயிருக்கு பாதிப்பு உண்டாகலாம். எனவே விவசாயிகள் கீழ்கண்ட பரிந்துரைகளை மேற்கொள்ள வேண்டும் என பரங்கிப்பேட்டை உதவி வேளாண்மை இயக்குநர் இ.தனசேகர் விவசாயிகளுக்கு ஆலோசனைகளை தெரிவித்துள்ளார்.

÷விவரம் வருமாறு: நீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி பயிர் மூழ்காத அளவு நீரை வெளியேற்ற வேண்டும். தற்போது மூழ்கியிருக்கும் பகுதிகளில் இளம்பயிரில் நட்ட குத்துக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் அதே ரக நாற்றுகள் கிடைத்தால் போக்கிடங்களில் நடவு செய்ய வேண்டும்.

÷சம்பா பயிர் நடவு செய்து 30-40 நாள்களுக்கு மேல் இருப்பின், இப்பயிரில் தண்டு துளைப்பான், இலை சுருட்டுப்புழு போன்ற பூச்சிகளும் பயிர் அடர்ந்து வளர்ந்திருக்கின்ற பகுதியில் புகையான், பச்சைத்தத்து பூச்சிகள், எலிகளின் சேதம் போன்றவை காணப்படலாம்.

÷இவற்றை கண்காணித்து பூச்சிக் கட்டுப்பாட்டிற்கான மேலாண்மை முறைகளை கையாள வேண்டும். பூச்சிகளின் தாக்குதல் தென்படும் இடங்களில் 1 லிட்டர் நீருக்கு 2 மி.லி. என்ற அளவில் புரோபினோபாஸ் மருந்தை கலந்து கைத்தெளிப்பான் மூலம் மழை இல்லாத நேரத்தில் தெளிக்கவும்.

÷தற்போது குலை நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிகையாக நடவு வயலில் ஏக்கருக்கு ஒரு கிலோ சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் கலவையை 30 கிலோ நன்கு மக்கிய மற்றும் உலர் நிலையில் உள்ள சாண எரு கலந்து இட வேண்டும். மேலும் ஏக்கருக்கு கார்பன்டசிம் 100 கிராம் அல்லது டிசைசைக்ளோசால் 200 கிராம் மருந்து 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

÷பாக்டீரியா இலைக்கருகல் மற்றும் கீறல் நோய்களின் அறிகுறிகள் தென்பட்டவுடன் 20 சதவீத பசுஞ்சாணக் கரைசல் 100 லிட்டர் நீரில் கரைத்து 12 மணி நேரம் ஊற வைத்து தெளிந்த நீரை வடித்து இத்துடன் 100 லிட்டர் நீரை கலந்து 200 லிட்டராக்கி தெளிக்கவும். அல்லது ஸ்டரெப்டோமைசின் சல்பேட்டுடன் டெட்ராசைக்கிளின் கலந்து மருந்து கலவையை ஏக்கருக்கு 120 கிராமுடன் காப்பர் ஆக்ஸி குளோரைடு 500 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் நீருடன் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும்.

÷நீர்வடிந்த பிறகு பயிரின் வளர்ச்சியை மேம்படுத்த ஒரு ஏக்கருக்கு 55 கிலோ யூரியாவுடன் 45 கிலோ ஜிப்சம் மற்றும் 10 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து 1 நாள் இரவு வைத்திருந்து இத்துடன் 42 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் சீராக இட வேண்டும்.

÷பயிரின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக 200 லிட்டர் நீரில் 2 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ ஜிங்சல்பேட்டைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும் என உதவி வேளாண்மை இயக்குநர் இ.தனசேகர் தெரிவித்துள்ளார்.

**மழைக் காலத்தில் வாழையை தாக்கும் வாடல் நோய்**

ந.குப்பன்

First Published : 02 Dec 2010 01:15:54 AM IST



வாடல் நோய்க்கான அறிகுறிகள்: 1. ஆரம்ப அறிகுறிகள். 2. அடி இலைகள் காய்ந்து தொங்குதல். 3. தண்டில் வெடிப்புகள். 4. தண்டினுள் கருஞ்சிவப்பு திட்டுகள்.

புதுச்சேரி: இப்போது நிலவும் தட்பவெப்ப சூழலில் வாழையில் 2 விதமான வாடல்நோய் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் மகசூல் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது.

÷வாழை தொன்மையான பணப் பயிர்களுள் ஒன்று. வாழைப்பழத்தில் சோடியம், பொட்டாஷியம், பெக்டின் சத்துகள் அதிக அளவில் இருக்கின்றன. மலச்சிக்கல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னைகளைச் சரி செய்ய வாழைப்பழம் பயன்படுகிறது.

÷வழக்கமாக ஒரு ஹெக்டேர் பரப்பளவில் 16 மெட்ரிக் டன் வாழை உற்பத்தி செய்யப்படுகிறது. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்சமாக 34 டன் வரை உற்பத்தி செய்ய முடியும். அதிக உற்பத்தியைத் தரும் வகையில் தகுந்த ரகங்களைத் தேர்வு செய்து பயிரிட வேண்டும். வாழையில் உயர் விளைச்சல் தரும் ரகங்கள் முக்கியமானவை.

÷அதற்கு அடுத்ததாக சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். சொட்டு நீர்பாசனம், நுண்ணூட்டச் சத்து இடுதல், திசு வளர்ப்பு வாழை, சிறந்த பராமரிப்பு முறைகள், பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிரிரக பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துதல், மண் பரிசோதனை செய்தல், வாழையில் பின்செய்நேர்த்தி செய்தல் போன்றவை மூலம் வாழையில் விளைச்சலைப் பெருக்க முடியும். மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களைத் தயாரிப்பது மூலம் அதிக லாபம் பெற முடியும்.÷தற்போது நிலவி வரும் தட்பவெப்ப நிலை சூழலில், விட்டுவிட்டு மழை பெய்வதாலும் காற்றில் ஈரப்பதம் அதிகம் இருப்பதாலும் வாழையில் 2 விதமான வாடல் நோய் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. பாக்டீரியா மற்றும் பூஞ்சாணத்தால் இவை ஏற்படுகின்றன. இதுகுறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என்.விஜயகுமார் கூறியது:

÷பாக்டீரியா வாடல் நோய்: வாழை நட்ட 5 மாதங்களுக்குள் இந்த நோய் காணப்படுகிறது. இந்த நோய் எர்வினியா என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது. இந் நோயால் தாக்கப்படும் வாழை ரகங்கள்: கேவண்பிஸ், நேந்திரம், பூவன், ரஸ்தாளி, கற்பூரவல்லி.

**÷அறிகுறிகள்:** ஆரம்பத்தில் குருத்து இலை காய்ந்து மற்ற இலைகள் பச்சையாகக் காணப்படும். பின்னர் பச்சை இலைகளும் காய்ந்துவிடும். தாக்கப்பட்ட மரக்கன்றுகளின் கிழங்குகள் கறுப்பு நிறத்தில் உப்பிக் கொண்டிருக்கும். கன்றைப் பிடித்து இழுத்தால் கையோடு வந்துவிடும். அப்போது அழுகிய கிழங்கு மண்ணில் தங்கிவிடும். பொதுவாக இந் நோய் வரும்பட்சத்தில் மரக்கன்றுகளின் கிழங்குகளில் இருந்து வழக்கத்துக்கு மாறாக அதிக பக்கக் கன்றுகள் தோன்றும். கிழங்கு பகுதியில் இருந்து ஒருவிதமான சாறு வடியும். விதை கிழங்கு மூலமும் நீரின் மூலமும் இந் நோய் பரவும்.

**÷கட்டுப்படுத்தும் முறைகள்:** 2 நாள்களுக்கு மேல் வாழைத் தோட்டத்தில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது. தற்போது பெய்து வரும் மழையால் நீர் தேங்கியிருந்தால் வடிகால் வசதி செய்ய வேண்டும். ஒரு மரத்துக்கு 25 கிராம் சூடோமோனாஸ் என்ற உயிரி ரக மருந்து மற்றும் வேப்பம் பிண்ணாக்கு கால் கிலோ, மக்கிய தொழு உரம் அரை கிலோ கலந்து உடனடியாக இட வேண்டும். பிளீச்சிங் பவுடர் 2 லிட்டரிலிருந்து 3 லிட்டர் அளவில் வாழையைச் சுற்றி மண்ணில் ஊற்ற வேண்டும்.

÷பூஞ்சாணத்தால் வரும் வாடல் நோய்: வாழை நட்ட 5 மாதத்துக்குப் பிறகுதான் இந்த நோய் தாக்குதல் காணப்படும். முதலில் வாழை இலையில் இலைப் புள்ளி நோய் உருவாகி, அந்த இலைப்புள்ளி பெரிதாகி இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, முடிவில் சருகாகி அனைத்து இலைகளும் கொட்டிவிடும். வாழைத் தண்டுப் பகுதியில் ஒரு வெடிப்பு காணப்படும். இதுதான் அறிகுறி. வாழைத் தண்டை குறுக்காக வெட்டிப் பார்த்தால் கருநீலக் கோடுகள் தென்படும். இது விதைக் கிழங்கு மற்றும் மண், நீரின் மூலம் பரவக்கூடியது.

÷**கட்டுப்படுத்தும் முறை:** 3 பங்கு வேப்பம் பிண்ணாக்கு, 2 பங்கு சர்க்கரை ஆலை அழுக்கு, ஒரு பங்கு சொட்டு சுண்ணாம்பு இதை மூன்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு கைப்பிடி அளவு ஒவ்வொரு மரத்துக்கும் கீழே இட வேண்டும். காய்ந்த சருகுகளை வெட்டி அப்புறப்படுத்தி எரித்துவிட வேண்டும். சூடோமோனாஸ் என்ற உயிரி ரக மருந்தை 1 கிலோ அளவுக்கு எடுத்து 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து வாரத்துக்கு ஒருமுறை 2 மாதம் தொடர்ச்சியாக வாழையின் வேர்ப்பகுதியில் இட்டு நீரைக் கட்டுப்படுத்தி பாய்ச்சும்போது இந்த நோய் தாக்கம் முற்றிலும் குறைந்துவிடும்.

÷ரஸ்தாளி, கற்பூரவல்லி, பூவன், மொந்தன், செவ்வாழை ஆகிய வாழை ரகங்களை இந்த நோய் தாக்கும். இந்த 2 விதமான வாடல் நோய் தாக்குதல் காரணமாக 40 சதவீதம் மகசூல் பாதிக்கப்படும். சூடோமோனாஸ் புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் 1 கிலோ ரூ. 65-க்கு கிடைக்கிறது.

**ராஜபாளையம் பகுதியில் நெல் நாற்று, கூலித் தொழிலாளர்கள் தட்டுப்பாடு**

First Published : 02 Dec 2010 09:27:06 AM IST

ராஜபாளையம், டிச. 1: ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் காலதாமதமாகப் பெய்த மழையால் நெல் நடவுப் பணி தற்போது அனைத்துப் பகுதியிலும் தீவிரமாக நடைபெறுவதால் நெல் நாற்று, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் செப்டம்பர் இறுதி முதல் வடகிழக்குப் பருவ மழை பெய்யத் துவங்கும். இந்த மழை இந்த ஆண்டு மிகத்தாமதமாக நவம்பர் இறுதியில் தான் பெய்தது. இதுவும் தேவையான அளவு பெய்யாததால் மொத்தம் உள்ள 127 கண்மாய்களில் 50 சதவிகிதம்கூட முழுஅளவில் நிரம்பவில்லை.

இருப்பினும் தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் ராஜபாளையம், முகவூர், தேவதானம், சேத்தூர், சத்திரப்பட்டி ஆகிய பகுதிகளில் நெல் நடவுப் பணிகளை விவசாயிகள் தற்போது துவக்கியுள்ளனர்.

மழை முன்கூட்டியே பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் ஆவணி மாதமே நெல் நாற்றுப் பாவி வைத்தனர்.

நெல் நாற்றுக்களை 28 முதல் 50 நாளில் நெல் ரகத்தைப் பொருத்து பறித்து நடவு செய்ய வேண்டும்.

தண்ணீர் தட்டுப்பாடு நிலவியதால் விவசாயிகள் நெல் நாற்றுக்களை நடவு செய்யாமல் தற்போது வயது முற்றி நெல் நாற்றுக்கள் பல இடங்களில் பயன்படாமல் வீணாகப் போனது.

இதனால் விவசாயிகள் பிறபகுதிகளில் கூடுதல் விலை கொடுத்து நெல் நாற்றுக்களை வாங்கி நடவு செய்கின்றனர்.

நெல் நடவுக்கு ஒரு ஆள் சம்பளம் 70ஆக இருந்தது. தற்போது அனைத்துப் பகுதியிலும் ஒரே நேரத்தில் நெல் நடவு துவங்கியுள்ளதால் நடவுக்கு ஆள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூலியும் 100 ரூபாயாக அதிகரித்துள்ளது.

டிராக்டர் தொளி உழவுக்கு ஒரு மணி நேரத்திற்கு 600 ஆகவும், மரம் அடித்து நடவு வயலைச் சமப்படுத்த கூலி 600 ஆகவும், ஆண்கள் கூலி 200 ஆகவும் அதிகரித்துள்ளது.

உரம், விவசாய இடுபொருள்கள் விலையும் அதிகரித்துள்ளதால் நெல் நடவு செலவு மட்டும் கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 50 சதம் வரை அதிகரித்துள்ளதாகவும், ஆனால் நெல் விலை மட்டும் உயராமல் உள்ளதால் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

**பசுந்தேயிலைக்கு குறைந்தபட்சம் 25 வழங்க வேண்டும்**

First Published : 01 Dec 2010 11:49:53 AM IST

கோத்தகிரி, நவ. 30: பசுந்தேயிலைக்கு குறைந்த பட்சம் கிலோவுக்கு | 25 வழங்க வேண்டும் என்று மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த சங்கத்தின் ஆண்டு மாநாடு, பொதுக் கூட்டம் கோத்தகிரி புயல் நிவாரணக் கூடத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் தும்பூர் ஐ.போஜன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் ஹாலன், லட்சுமணன், திப்பாகவுடர், பெள்ளன் முன்னிலை வகித்தனர்.

தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிறு தேயிலை விவசாயிகளின் நலனுக்கு, தேயிலை வாரியம் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

மேலும், சிறு தேயிலை விவசாயிகள், தரமான பசுந்தேயிலையைப் பறித்து, நல்ல விலை பெற்றுக் கொள்ளுமாறும், கலப்படம் செய்யும் தேயிலை தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பசுந்தேயிலையைப் பறிக்க கூலி உயர்வு, இடு பொருள்கள் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பசுந்தேயிலை கிலோவுக்கு | 25 என விலை நிர்ணயிக்க வேண்டும்.

ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை பசுந்தேயிலைக்கு குறைந்த விலை வழங்கப்பட்டதால், விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்கு, | 5 ஆயிரம் மானியம் வழங்க வேண்டும்.

முன்புபோல், தேயிலை வாரியம் மூலம் விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்விக் கடன் வழங்க வேண்டும்.

கவாத்து இயந்திரம், தேயிலை பறிக்கும் இயந்திரம் ஆகியவற்றை, கிராமத்துக்கு ஒன்று வீதம் முழு மானியத்தில் வழங்க வேண்டும்.

தேயிலை வாரியம் மூலம் அமலாக்கப்பட்ட சட்டமான, 65:35 விலை பகிர்மானத் திட்டத்தை, அனைத்து தொழிற்சாலைகளும் அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வங்கிக் கடனை, முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நிலத்தை அளந்து, விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்க வேண்டும்.

அனைத்து வட்டங்களிலும் தலா ஒன்று வீதம், காரட் கழுவும் இயந்திரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிறந்த சிறு விவசாயிக்கான பரிசு, எடக்காடு கிராமத்தை சேர்ந்த சரஸ்வதி சிவலிங்கன், பாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட பசுந்தேயிலை முகவர்கள் சங்கச் செயலர் உலிக்கல் சிவாஜி மற்றும் தேயிலை விவசாயிகள் கலந்து கொண்டனர். பெள்ளி கவுடர் வரவேற்றார். வாசுதேவன் நன்றி கூறினார்.

**சின்ன வெங்காயம் விலை மூட்டைக்கு 300 சரிவு**

First Published : 01 Dec 2010 11:59:14 AM IST

தருமபுரி, நவ. 30: பென்னாகரம் வாரச்சந்தையில் சின்ன வெங்காயம் விலை மூட்டைக்கு | 300 குறைந்தது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சுற்றுவட்டார பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. பென்னாகரத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் வாரச்சந்தை நடப்பது வழக்கம். இதனால், வெங்காய அறுவடை காலங்களில் இச்சந்தையில் மூட்டை மூட்டையாக சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்படும்.

இங்கிருந்து பெங்களூர், கோவை, சென்னை உள்ளிட்ட பிற முக்கிய நகரங்களுக்கு சின்னவெங்காயம் விநியோகம் செய்யப்படுகிறது. இச்சந்தையில் இந்த வாரம் 2 ஆயிரம் மூட்டைகள் விற்பனையாகின.

கடந்த வாரம் 70 கிலோ கொண்ட மூட்டை | 1,000-க்கு விற்பனையானது. ஆனால், இந்த வாரம் | 300 குறைந்து | 700-க்கு விற்பனையானது. வெங்காய அறுவடை தீவிரமாக நடைபெறுவதால் சின்ன வெங்காயம் விலை குறைந்துள்ளதாக சந்தைக்கு வந்திருந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

வெங்காய அறுவடையையொட்டி இச்சந்தைக்கு அதிக எண்ணிக்கையிலான வெளியூர் வியாபாரிகள் வந்திருந்தனர். விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**முட்டை விலை**

First Published : 01 Dec 2010 01:02:34 PM IST

நாமக்கல், நவ. 30: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் | 2.52, சென்னையில் | 2.55.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ | 39, முட்டைக் கோழி கிலோ | 32.

நாட்குறிப்பு ஆணையை ரத்து செய்யக் கோரிக்கை

கிருஷ்ணகிரி, நவ. 30: நாட்குறிப்பு ஆணை மற்றும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் அருகே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கவன ஈர்ப்பு வாயிற் கூட்டத்தில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

வட்டத் தலைவர் ஆர்.பழனிசாமி தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலர் எஸ்.அசோக்குமார், துணைத் தலைவர் ஆர்.ராஜா கிருஷ்ணன், வட்டச் செயலர் கே.இஸ்மாயில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கால்நடை வளர்ப்பில் நவீன உத்திகளுக்கான கண்காட்சி**

First Published : 01 Dec 2010 12:24:46 PM IST

நாமக்கல், நவ. 30: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தில் கால்நடை வளர்ப்பில் நவீன உத்திகளுக்கான கண்காட்சி வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் (டிசம்பர் 3,4) நடைபெறுகிறது.

இதுகுறித்து கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சி.சந்திரகாசன் நிருபர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

பரண்மேல் ஆடு வளர்ப்பு, மிதத் தீவிர முறையில் தலைச்சேரி மற்றும் மேச்சேரி ஆடு வளர்ப்பு, போயர், சிரோகி போன்ற உயர் ரக ஆட்டினங்கள், கறவை மாடு வளர்ப்புக்கான நவீன உத்திகள் ஆகியவை குறித்து மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இந்த நிகழ்ச்சியில் செயல் விளக்கம் அளிக்கப்படும்.

இதைத் தவிர, பால் கறவை இயந்திரத்தை உபயோகப்படுத்துதல், கறிக்கோழி, வான்கோழி, ஜப்பானிய காடை கூண்டு முறையில் வளர்த்தல், நவீன தீவன பயிர் உற்பத்தித் திடல், அறிவியல் முறையில் முயல் வளர்ப்பு ஆகியவை குறித்தும் விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

இந் நிகழ்ச்சியையொட்டி, அலங்கார மீன் வளர்ப்பு, மதிப்பூட்டிய மீன்பொருள்கள் தயாரித்தல், கெண்டை மீன் வளர்ப்பு ஆகியவை குறித்த கண்காட்சியும் நடைபெற உள்ளது.

இத்துடன் பண்ணைகளில் உபயோகிக்கப்படும் கருவி, ஆட்டுப் பண்ணைக் கருவி, தீவன மற்றும் மருந்து நிறுவன உற்பத்தி பொருள்கள், கால்நடை மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள், புத்தகங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

இதில் அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பில் 25 அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த பண்ணையத்தின் ஒரு பகுதியாக, ராஜராஜன்-1000 நெல் சாகுபடி, புதிய ரக சோளம், கம்பு சாகுபடி, மானாவரி நிலத்தில் நிலக்கடலை சாகுபடி, பேரீட்சை சாகுபடி, குழித்தட்டு நாற்றங்கால் மூலம் வீரிய ஒட்டு ரக காய்கறி சாகுபடி, குருத்து ஒட்டு மாங்கன்று உற்பத்தி ஆகியவை குறித்தும் வேளாண் துறை அலுவலர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர்.

கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கோழியின நோய் ஆய்வகம், கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தின் சார்பில் சிறப்பு செயல் விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

இந்தக் கண்காட்சியில் பங்கேற்க ஆர்வமுள்ள விவசாயிகளும், பொதுமக்களும் புதன்கிழமைக்குள் வேளாண் அறிவியல் நிலையத்தை 04286-266345, 04286-266244 ஆகிய தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு, தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

தினமலர்

**ஆட்டிறைச்சி விலை விர்ர்... மீனுக்கு மாறும் மக்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,02:10 IST

திருவள்ளூர் : மாவட்டத்தில் கிலோ 240 ரூபாய்க்கு விற்றுவந்த ஆட்டிறைச்சி, தற்போது 260 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கோழி இறைச்சி கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை

செய்யப்படுகிறது. இந்நிலையில் மீன் கிலோ 50 ரூபாய்க்கு விற்கப்படுவதால், பலர் அதை விரும்பி வாங்கி சாப்பிடுகின்றனர். தமிழகத்தில் கோழிக்கறியின் விலை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் கோழிக்கறி கிலோ 120 முதல் 130 ரூபாய் வரை விற்கப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் கூட குறையாத கோழிக்கறி விலை, தற்போது குறைந்துள்ளது குறித்து வியாபாரிகளை கேட்டதற்கு, "தற்போது சபரிமலை செல்லும் பக்தர்கள் விரதமிருப்பதாலும், இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் விலை குறைந்துள்ளது' என்றனர். இந்நிலையில் மாவட்டத்தில் திருவள்ளூர் நகர் பகுதியில் 240 ரூபாய்க்கு விற்றுவந்த ஆட்டிறைச்சி, தற்போது 260 ரூபாய்க்கும், கிராமங்களில் 240 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. குறைவான விலையில் மீன்கள் கிடைப்பதால், திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் ஆட்டுக்கறி, கோழிக்கறியை தவிர்த்துவிட்டு, மீன் சாப்பிட துவங்கி விட்டனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை காக்க வேளாண் இணை இயக்குனர் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,01:10 IST

கடலூர் : மழையில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு சேதத்திலிருந்து காக்க வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் பரிந்துரை செய்துள்ளார். அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வடகிழக்கு பருவமழையின் காரணமாக நெற்பயிர்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் பயிர்கள் பாதிக்க வாய்ப்புள்ளது. பயிர்களை காக்க வேளாண் துறை கீழ் கண்ட பரிந்துரைகளை தெரிவித்துள்ளது. இதில் சம்பா, தாளடி பயிர்கள் இள நடவு பாதிக்கப்பட்டு கரைந்து திட்டு திட்டாக இருந்தால் கையில் நாற்றுகள் இருந்தால் கலைத்து நடவேண்டும். இல்லை என்றால் இருக்கும் பயிரை கலைத்து நடவேண்டும். பாதியளவு நீரில் மூழ்கியிருக்கும் பயிர்களில் மஞ்சள், பழுப்பு நிறமாக மாற வாய்ப்புள்ளது. இதை போக்க ஏக்கருக்கு 2 கிலோ யூரியா, 1 கிலோ சிங்க்சல்பேட்டை 200 லிட்டர் நீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் பயிரின் இலைகளின் மேல் தெளிக்க வேண்டும்.

தண்ணீர் வடிந்த பிறகு பயிர்கள் ஊட்டசத்து பற்றாக்குறையாக இருக்கும் இவற்றை போக்க ஏக்கருக்கு 22 கிலோ பொட்டாஷ் உரம் 17 கிலோ மற்றும் 16 கிலோ ஜிப்சம் கலந்து மேலுரமாக இடவேண்டும். தொடர்ந்து நீரில் மூழ்கிய நெற்பயிர்களில் கூட்டுப்புழு சேதம் அதிகமாக காணப்பட்டால்,ஏக்கருக்கு ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், 3 கிலோ மணலுடன் கலந்து நடவு வயலில் சீராக தூவ வேண்டும். பின் ஒரு கயிற்றை வயலின் இரு ஓரங்களிலும் பிடித்து இருவர் பயிரின் பாதி அளவிற்கு பிடித்துக் கொண்டு நடந்தால் கூட்டுப்புழுக்கள் நீரில் விழுந்து அழிந்து

விடும்.  அல்லது 400 மி.லி., மோனோகுரோட்டோபாஸ் அல்லது 500 மி.லி., குளோர்பைரிபாஸ் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**துல்லிய பண்ணை திட்ட வயல்விழா**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,04:16 IST

பொள்ளாச்சி:"துல்லிய பண்ணைய திட்டத்தின் மூலம் காய்கறி பயிர்கள் சாகுபடி செய்தால், 40 சதவீதம் வரை லாபம் பெறலாம்' என, தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் தெரிவித்தார்.கோவை வேளாண் பல்கலை, ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பில் ஆனைமலை அடுத்த சாமியாண்டிபுதூரில் துல்லிய பண்ணைய திட்ட வயல் விழா நடந்தது. நீர்வள, நிலவள திட்ட விஞ்ஞானி சீனிவாசன் வரவேற்றார். வேளாண் பல்கலை மூலம் துல்லிய பண்ணைய திட்டத்திற்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் மானியம் குறித்து விளக்கப்பட்டது.ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம், வயல்விழாவை துவக்கி வைத்து பேசுகையில், ""துல்லிய பண்ணைய திட்டத்தின் மூலம் பயிர் செய்யப்படும் காய்கறி பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவாக இருக்கும். அதனால், வழக்கமாக மேற்கொள்ளப்படும் காய்கறி உற்பத்தி முறைகளை விட இம்முறையை பயன்படுத்தும் போது, ஒரு எக்டருக்கு கூடுதலாக 10 முதல் 15 டன் வரை அதிக மகசூல் கிடைக்கும்.

இத்திட்டம் விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாக இருந்து வருகிறது. ஒட்டு மொத்த காய்கறி உற்பத்தி செலவும் கணிசமாக குறையும். மேலும், விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் காய்கறி உற்பத்தி செய்வதன் மூலம் 30 முதல் 40 சதவீதம் வரை கூடுதல் லாபம் பெறலாம்'' என்றார்.விழாவில், துல்லிய பண்ணைய திட்டத்தில், உர மற்றும் நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பேராசிரியர் ராஜகுமார் விளக்கமளித்தார். முன்னோடி விவசாயிகளான தர்மராஜ், கணேசன் ஆகியோர் இத்திட்டத்தினால், காய்கறிகளை பயிரிடும் முறை குறித்து விளக்கினார்.சாமியாண்டிபுதூர், திம்மங்குத்து, ஆத்துபொள்ளாச்சி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 30 விவசாயிகளும், முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் கார்த்திகேயன், கயாழினி ஆகியோரும்பங்கேற்றனர்.

**பனியால் கருகும் பயிர்கள்கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,04:12 IST

சோமனூர்:கடும் பனி தொடர்ந்து வீசுவதால், சோளப் பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.சோமனூர், சூலூர், கருமத்தம்பட்டி, வாகராயம் பாளையம் சுற்றுப்பகுதியில் ஏராளமான விவசாய நிலங்கள் உள்ளன. இப்பகுதியில் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் பயிர் வகைகளை பயிரிட்டுள்ளனர். இரண்டு மாதமாக இப்பகுதியில் தொடர்ந்து நல்ல மழை பெய்தது. விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர் ஆதாரம் அதிகரித்தது.

விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். சுற்றுப்பகுதியில் உள்ள மானாவாரி நிலங்களில் பச்சைப்பயிர், கொள்ளுப் பயிர், தட்டைப் பயிர் போன்ற பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. வெள்ளைச் சோளம், நரிப்பயிர் போன்ற தீவனப் பயிர்களும் விதைக்கப்பட்டன. தொடர்ந்து பெய்த மழையால் இந்த பயிர் வகைகள் அனைத்தும் விரைவாக வளர்ந்தன. பல பகுதிகளில் ஆளுயரத்துக்கும் இப்பயிர்கள்வளர்ந்து காணப்படுகின்றன. ஒரு சில பகுதிகளில் மட்டும் இதன் வளர்ச்சி சற்று குறைவாக உள்ளது. தொடர்ந்து இடைவிடாமல் பெய்த மழையால் பாதிப்புக்குள்ளானது. நிலத்தில் ஈரப்பதம் அதிகரித்ததால், இவை அழுகும் நிலையில் உள்ளன. சோளக் கதிர் வெள்ளையாகவும், உரிய வளர்ச்சி பெறாமலும் காணப்பட்டது. இரண்டொரு நாட்கள் மழை இடைவெளி விட்ட நிலையில், கடும் பனிப் பொழிவு காணப்படுகிறது. சோளப் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. மானாவாரி நிலங்களில் சோளம் பயிரிட்ட விவசாயிகள் இதனால் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**நெற்பயிரை தாக்கும் பூஞ்சை நோய்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:09 IST

வெள்ளகோவில் : தொடர் மழை பெய்து வருவதால், குலைநோய், பூஞ்சை நோய் நெற்பயிரை தாக்கும் வாய்ப்புள்ளது. நிலங்களில் அதிகளவு மழைநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் அறிகுறி இருந்தால் வேளாண் துறைக்கு தெரிவிக்குமாறு இத்துறையினர் அறிவுறுத்துகின்றனர்.

வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: வெள்ளகோவில், மூலனூர், முத்தூர் பகுதிகளில் அதிகளவு நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் தொடர் மழையால், பூஞ்சை நோய் தாக்க வாய்ப்புள்ளது. இரவில் பனி; பகலில் மழை என்ற சீதோஷ்ண நிலையால், சூரிய ஒளி சிறிதும் நெற்பயிருக்கு கிடைக்காமல் போகிறது; ஈரப்பதம் அதிகமாகிறது. இதனால், குலை நோய், பூஞ்சாண நோய் ஏற்பட்டு, பயிர் வளர்ச்சி மற்றும் மகசூலில் பாதிப்பு

ஏற்படுத்துகிறது.மழைக்காலத்தில் ஐ.ஆர்-20, கோ-43, ஆடுதுறை ரகங்களை பயிரிடுவது சிறந்தது. இவற்றில், நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். ஆனால், அதிக சதைப்பற்று எதிர்பார்க்கும் விவசாயிகள் பலர், டீலக்ஸ் பொன்னி போன்ற, வேளாண் துறை பரிந்துரைக்கும் ரகங் களை பயிரிடுகின்றனர். இதுபோன்று பயிரிடும் போது, தொடர் மழைக்காலங்களில் நஷ்டமடைய நேரிடுகிறது.

நோய் தாக்கம் தெரியவந்தால், டைத்தேன், பெவிஸ்டின் மருந்துகளை கலந்து தெளிப்பது பலன் தரும். ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், நோய் தாக்கும் பூச்சிகளை அழிக்கும் நன்மை தரும் பூச்சிகளும் இறந்து விடும். எனவே, தேவைப்பட்டால் மட்டும் மருந்து தெளிப்பது நல்லது. மேலும், வயலில் அதிக நீர் தேங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; 10 அங்குல உயரத்துக்கு மேல் நீர் தேங்கினால் வேர் அழுகல் ஏற்படவும் வாய்ப்புள்ளது, என்றார்.

**மல்லிகை சாகுபடி பாதிப்பு: இருமடங்கானது விலை ஏற்றம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,02:06 IST

கரூர்: தொடரும் பருவமழையில், கரூர் மாவட்ட பூ உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டில் விற்பனைக்கு வரும் பூ விலையும் இருமடங்கு அதிகரித்துள்ளது. கரூர் மாவட்டத்தில், குளித்தலை அடுத்துள்ள தாணியாம்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் 500 ஏக்கருக்கு மேல் மல்லிகை மற்றும் பல்வேறு இன பூக்கள் பயிரிடப்படுகிறது. குளித்தலை பகுதியில் தாணியாம்பட்டி, சூரியனூர், நெய்தலூர், முதலைப்பட்டி பகுதியில் அதிக அளவு மல்லிகை பயிரிடப்படுகிறது. இங்கிருந்து திருச்சி, ஸ்ரீரங்கம், சேலம், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளுக்கு மல்லிகை பூ அனுப்பப்படுகிறது. கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன்று மாதங்களில் மல்லிகை பூ விளைச்சல் குறைவதால், இக்காலத்தில் மட்டும் திருச்சி, திண்டுக்கல், சேலம் மார்க்கெட்டில் இருந்து பூ வரவழைக்கப்படுகிறது. சீசன் இல்லாத காலங்களில் விழா மேடை, சுபகாரியம், துக்க நிகழ்ச்சி அலங்கார பணிக்கு பூ சப்ளை செய்கின்றனர். குறைந்த முதலீட்டில் லாபம் கிடைப்பதால், பூச்செடி வளர்க்க விவசாயிகளிடம் வரவேற்பு அதிகரித்துள்ளது. மல்லிகை விவசாயிகள் கூறியதாவது: தாணியாம்பட்டியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்படும் மல்லிகை, வெளி மாவட்டங்களுக்கு அதிக அளவில் தினசரி அனுப்பப்படுகிறது. காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரை பூ பறித்தல், பின்னுதல் பணி நடக்கிறது. தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் தினசரி குறைந்தது 5 முதல் 10 கிலோ வரை பூ பறித்து, பின்னுகின்றனர். கிலோ ஒன்றுக்கு சராசரியாக 15 ரூபாய் வரை இவர்களுக்கு கூலி தொகை கிடைக்கிறது. மல்லிகை தோட்டம் உருவாக்கிவிட்டால், குறைந்தது 10 ஆண்டில் இருந்து அதிகபட்சம் 15 ஆண்டுவரை பூ பறிக்க முடியும். ஆண்டுக்கு ஒன்பது மாதம் பூ மலரும் காலமாக உள்ளது. கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன் று மாதம் மட்டுமே பனிக்காலம் என்பதால் பருவம்

குறைந்து விடுகிறது. இந்த காலகட்டத்தில் பூச்செடியை கூண்டுகளாக மூடி கட்டிவிட்டு, பனிக்காலம் முடிந்ததும் செடியின் கூண்டை அவிழ்த்து மருந்து தெளிக்கப்படும். வாரத்தில் ஒரு முறை தண்ணீர் அளித்தால் போதுமானது. 15 நாளுக்கு ஒரு முறை பூச்சி மருந்து "ஸ்பிரேயர்' மூலம் தெளிக்கப்படுகிறது. மல்லிகை செடி க்கு அதிக அளவு இயற்கை உரம்தான் பயன்படுத்தப்படுகிறது. மல்லிகை வணிகப்படுத்துவதில் போதிய விழிப்புணர்வு இல்லை. மலர் செடி விவசாயம் மற்றும் விற்பனையில் ஈடுபடுவோருக்கு தனி அமைப்பு இல்லாததால், எங்கள் பிரச்னை குறித்து அரசு பார்வைக்கு கொண்டு செல்வதில் சிக்கல் உள்ளது. சீசன் காலங்களில் கூடுதலாக விளையும் மல்லிகை பூவிருந்து "எசென்ஸ்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று குளித்தலையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். பனிக்காலம் மட்டுமல்லாது, பருவமழையும் தொடர்வதால் கரூர் மாவட்டத்தில் பூ உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது கிலோ ஒன்றுக்கு மல்லிகை 300 ரூபாய், ஜாதிமுல்லை 350 ரூபாய், முல்லை 300 ரூபாய், கனகாம்பரம் 1,000 ரூபாய், செவ்வந்தி 100 ரூபாய், சம்பங்கி 80 ரூபாய் என விலையுள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன் இருந்த விலையில் இருந்து, தற்போது விலையேற்றம் இருமடங்காகிவிட்டது குறிப்பிடத்தக்கது. உள்ளூர் விளைச்சல் முற்றிலும் நின்றுபோனதால், திண்டுக்கல் மற்றும் ஸ்ரீரங்கத்தில் இருந்து பூ வரவழைக்கப்படுகிறது.

**விதை நெல்லுக்கு வலை விரித்து பாதுகாப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,02:07 IST

வேலாயுதம்பாளையம்: வயல் வெளியில் வந்திறங்கும் பறவை கூட்டம், விதை நெல்லை உணவாக்கி, பயிர் சாகுபடிக்கு பாதிப்பு ஏற்படுத்துகிறது. இதனால், விதை நெல், நாற்றுக்கு விலை விரித்து பாதுகாப்பு ஏற்படுத்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. கரூர் மாவட்டம், வேலாயதம்பாளையம் அடுத்துள்ள நொய்யல் சுற்றுப்பகுதியில் நிலத்தில் படையெடுக்கும் பறவை கூட்டம் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குருவி, நாரை, கொக்கு, மயில் உள்ளிட்டவை அதிக அளவில் விதை நெல்லை இரையாக்கிவிடுகின்றன. விலை கொடுத்து வாங்கும் வீரியமிக்க நெல் விதையை, பறவைகள் இரையாக்குவதால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், வீரியம் மிக்க விதை நெல் பறவைக்கு இரையாகிவிடக்கூடாது என்ற நோக்கில் பாதுகாப்புக்கு வலை விரிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கான விதை நெல்லை, 30 நிமிடத்தில் இரையாக்கிவிடும் பறவை கூட்டத்தை எதிர்கொள்ள வலை போடுவது மட்டுமே பாதுகாப்பாக என்று, பல வவசாயிகளும் விதை நெல்லை பாதுகாக்க வலை உபயோகிக்க துவங்கியுள்ளனர். பறவைகளை

துன்புறுத்தாமல், சாகுபடியை பாதுகாக்கும் வகையில் விவசாயிகள் கையாளும் புதிய முயற்சி இயற்கை ஆர்வலர்களை கவர்ந்துள்ளது.

**வேளாண் ஆய்வு மையத்தில் மண் பரிசோதனை அறிக்கை, 600 உழவர்களுக்கு வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 02,2010,02:14 IST

முசிறி: தொட்டியம் வேளாண் ஆய்வு மையத்தில் 600 உழவர்களுக்கு மண் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தொட்டியம் வட்டத்தில் உள்ள தொட்டியம், காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி ஆகிய பிர்காவுக்கு உட்பட்ட விவசாயிகள் பயன்பெரும் வகையில் ரூபாய் 6 லட்சம் மதிப்பில் வேளாண் தகவல் மையம் மற்றும் சிறுமண் பரிசோதனை ஆய்வுக்கூடம் அரசலூர் பஞ்சாயத்தில் உள்ள திருநாராயணபுரம் கூட்டுறவு வேளாண் மையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் ஓய்வு பெற்ற வேளாண் விஞ்ஞானி சந்திரகாந்தன் ஆலோசகராக இருந்து உழவர்களுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார். ஓய்வு பெற்ற வேளாண் உதவி அலுவலர் ஆறுமுகம் இம்மையத்திற்கு உதவி புரிந்து வருகிறார். இம்மையத்தின் மூலம் ஆரம்ப கட்டமாக விவசாயிகள் வயலில் மண் ஆய்விற்கு எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. 600 விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி விவசாயிகள் நெல், வாழை பயிரிட்டுள்ளனர். "ராஜராஜன் 1000' முறையில் சாகுபடி செய்துள்ள வயலில் களைகளை இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு விசை கோனோ வீடார் 31 ஆயிரம் ரூபாயில் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.ராஜராஜன் 1000 முறையில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இந்த விசை கோனோ வீடார் கருவியை பயன்படுத்தி நெல், விளைச்சலை இரட்டிப்பு மகசூல் அடைய தொட்டியம் வட்ட வேளாண் உதவி இயக்குனர் சந்தரிசேகரன் மற்றும் அரசலூர் வேளாண் கூட்டுறவு வங்கி செயலாளர் சரவணன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர். விபரங்களுக்கு வரதராஜபுரம் வேளாண் கூட்டுறவு வங்கியை அணுகுமாறு பொதுமக்களை வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3,000 ஹெக்டர் நெல், 5,845 ஹெக்டர் பருத்தி பாதிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,02:15 IST

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையில், 3,000 ஹேக்டர் நெல் பயிர், 5,845 ஹேக்டர் பருத்தி பயிர் நீரில் மூழ்கின. சேதமதிப்பு கணக்கெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும், மோட்டார் பழுதுக்கு 5,000 ரூபாயும் நிவாரணம் வழங்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து, வாரத்துக்கும் மேலாக வெளுத்து வாங்கியது. திருச்சி மாவட்டத்தில் பரவலாக பெய்த மழையில், அரியாறு ஆற்றுக் கோட்டத்தில் உள்ள 112 ஏரிகள், கோரையாற்றுப் பாசன கோட்டத்தில் உள்ள 76 குளங்களில், நீர்மட்டம் மளமளவென உயர்ந்தது. பல ஏரி, குளம் நிரம்பின. காவிரியில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. முக்கொம்பிலிருந்து காவிரி, கொள்ளிடத்தில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடந்த இரண்டு நாட்களாக மழை நின்றது. எனினும், முழுமையாக வெயில் காணப்படவில்லை. தொடர் மழையில், திருச்சி மாவட்டம் முழுவதும் 15க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தும், மரங்கள் சாய்ந்தும் பாதிப்பு ஏற்பட்டது. திருவெறும்பூர் யூனியனில், அரசங்குடி, வேங்கூர், குவளக்குடி, பத்தாளப்பேட்டை, நடராசபுரம், விளாங்குளம், அசூர், பொய்கைக்குடி, கிளியூர் உள்ளிட்டப் பகுதிகள். லால்குடி யூனியனில், அன்பில், திண்ணியம், ஆலங்குடி மகாஜனம், நெருஞ்சாடிக்குடி, கீழப்பெருங்காவூர், பெருமங்களம், வாளாடி உள்ளிட்ட பகுதிகள். இதுதவிர மண்ணச்சநல்லூர், கோவத்தக்குடி, தழுதாளப்பட்டி உள்ளிட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், துறையூர் யூனியன் பகுதிகளில் சாகுபடி பருத்தி பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது சேதமதிப்பு கணக்கெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருச்சி மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் சேகர் கூறுகையில், ""திருச்சி மாவட்டத்தில் 3,000 ஹெக்டர் நெல், 5,845 ஹெக்டர் பருத்தி பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. தற்போது மழைநீர் வடிந்து வருகிறது. இவற்றில், முழுமையான அழுகிய பயிர்கள், பகுதி பாதித்த பயிர்கள், மழைநீரை தாங்கி நன்றாக உள்ள பயிர்கள் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். இதன் அடிப்படையில் சேதமதிப்பு கணக்கெடுப்பு பணி தீவரமாக நடந்து வருகிறது. ஓரிரு நாட்களில் சேதமதிப்பு இறுதி செய்யப்படும். நிவாரணம் குறித்து அரசு முடிவெடுக்கும்," என்றார். பாரதீய கிசான் சங்கப் பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு கூறுகையில், ""மழைவெள்ள பாதிப்பில் பயிர்கள் ஒருபுறம் பாதிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் பல இடங்களில் மின் மோட்டாரில் நீர் புகுந்து பழுதாகியுள்ளது. கிணறுகள் இடிந்துள்ளது. இவற்றை பழுதுநீக்க, சீரமைக்க முறையே 5,000 ரூபாயும், பயிர் சேதத்துக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவெறும்பூர் ஒன்றிய செயலாளர் நடராஜன் கூறுகையில், ""பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து வேளாண் துறையினர் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும். ஏக்கருக்கு குறைந்தது 12 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பழுதான சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**தென்னை சாகுபடியை அதிகரிக்க மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,23:13 IST

கம்பம்: தென்னை மரச் சாகுபடி பரப்பை அதிகரிக்க ஒரு ஹெக்டேருக்கு 35 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுவதாக தென்னை வளர்ச்சி வாரியம் அறிவித்துள்ளது. தேனி மாவட்டத்தில் பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி நடக்கிறது. சில ஆண்டுகளாக தென்னையை தாக்கிய வாடல் நோய்களால், தென்னை மரங்கள் வெட்டப்பட்டன. இதனால் தென்னை சாகுபடி பரப்பு குறைந்தது. தற்போது தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க கொச்சியை தலைமையிடமாக கொண்ட தென்னை வளர்ச்சி வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக ஒரு ஹெக்டேருக்கு 35 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பணமாக தராமல் உரம் மற்றும் பூச்சி மருந்தாக தரப்பகிறது. இவை இரண்டு தவணைகளில் வழங்கப்படுகிறது.

**தேங்காய் விலை இறங்குமா? உயர்ந்தும் பலனில்லை என்கின்றனர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,23:36 IST

வத்திராயிருப்பு: நான்கு மாதங்களாக உயர்ந்துள்ள தேங்காய் விலை குறைய, இன்னும் நான்கு மாதங்களாகும். "இந்த விலை உயர்வு பலனளிக்கவில்லை,' என விவசாயிகள் தெரிவித்தனர். விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவி., வத்திராயிருப்பு பகுதிகளில் தென்னை விவசாயம் அதிகம். இங்கிருந்து தினமும் 10 லட்சம் காய்களுக்கு மேல் வடமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த கோடைகாலம் தொடங்கியதிலிருந்தே தேங்காய் விளைச்சல் குறைந்தது. ஆயிரம் தேங்காய் விளையும் தோப்பில் 200 காய்களே கிடைத்தன. இதனால் வடமாநிலங்களுக்கு அனுப்புவதும் குறைந்துவிட்டது. வரத்து குறைந்ததால் விலை உயரத்துவங்கியது. ஒரு காய் 3.80 ரூபாய் என இருந்தது, தற்போது 5.80 ரூபாய் முதல் 6.10 வரை விற்பனையாகிறது. நான்கு மாதங்களாக தொடரும் இந்த விலை உயர்வு, தற்போது பெய்யும் கனமழைக்கு பின்னும் குறைந்தபாடில்லை. மழையால், முன்போல் மகசூல் பெறுவதற்கு இன்னும் நான்கு மாதங்களாகும் என்பதால், தற்போதைக்கு விலை குறைய வாய்ப்பில்லை என்கின்றனர் வியாபாரிகள். மழை நேரத்தில் தென்னை மரத்தில் ஏற முடியாது. நீர் தேங்கி சதுப்பு நிலமாக உள்ளதால் தேங்காய்களை ஏற்றிவர வாகனங்கள் உள்ளே செல்லமுடியவில்லை. எனவே தேங்காய் விலை குறைய சிலமாதங்களாகும். ""மகசூல் குறைந்து விலை உயர்வால் எங்களுக்கு பலனில்லை," என்கிறார் கூமாப்பட்டி விவசாயி திருப்பதி. ""மாதத்திற்கு 5 லோடு அனுப்பிய நாங்கள் தற்போது ஒரு லோடு அனுப்புவதற்கே திணறுகிறோம்," என்கிறார் வத்திராயிருப்பு

வியாபாரி சோலையப்பன். விலை உயர்வு இருதரப்பினருக்கும் பலன் தரவில்லை என்ற வாதம் ஒருபுறமிருக்க,  தேங்காய் விலை குறைவை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் பொதுமக்கள்.

**பிசான நெல் பயிருக்கு மேலுரம் இடும் முறைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,02:40 IST

தென்காசி : பிசான நெல் பயிருக்கு மேலுரம் இடும் முறைகள் குறித்து செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரம் செங்கோட்டை, புளியரை, கற்குடி, பகவதிபுரம், இலத்தூர் பகுதிகளில் பிசான நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. பிசான நெல் பயிருக்கு நட்ட 15ம் நாள், 30ம் நாள், 45ம் நாள் மேலுரம் இட வேண்டும். அதாவது ஏக்கருக்கு முதல் மேலுரமாக 12 கிலோ தழைச்சத்து அளிக்க 27 கிலோ யூரியா இட வேண்டும். யூரியா இடுவதற்கு 12 மணி நேரம் முன்பு யூரியாவுடன் ஐந்தரை கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து பின் இட வேண்டும். இதன் மூலம் பயிருக்கு தழைச்சத்து சிறுக சிறுக கிடைத்து பயிர் செழித்து வளர ஏதுவாகிறது. பயிருக்கு பூச்சி நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது.

இரண்டாம் மேலுரமாக 12 கிலோ தழைச்சத்து அளிக்க 27 கிலோ யூரியாவும், 12 கிலோ சாம்பல் சத்து அளிக்க 20 கிலோ பொட்டாஷ் உரமும் இட வேண்டும். பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இடுவதால் பயிருக்கு பூச்சிநோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. மூன்றாம் மேலுரமாக 12 கிலோ தழைச்சத்து அளிக்க 27 கிலோ யூரியா இட வேண்டும். இவ்வாறு முறையாக தேவையான அளவு, தேவையறிந்து இடுவதால் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும் என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

தின பூமி

பால் கொள்முதல் விலையை உயர்த்த பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் கோரிக்கை

சேலம் டிசம்பர் 02,

பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்த வேண்டும் இல்லையென்றால் இன்றும்.... ஒரு மாதத்திற்குள் போராட்டத்தை அறிவிப்போம் என தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.சேலம் நேஷனல் ஹோட்டலில் நேற்று காலை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க மாநில செயற்குழு கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தலைமை வகித்தார். இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதையடுத்து செங்கோட்டுவேல் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது.தமிழக அரசு மாதிரி கூட்டுறவு சட்டத்தை சட்டமாக இயற்ற வேண்டும். அச்சட்டத்தின் அடிப்படையில் 3 அடுக்குப் பால் கூட்டுறவுக்கு தேர்தல் நடத்தி கொடுக்க வேண்டும் என முதல்வரை கேட்டுக்கொள்கிறோம்.2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ந் தேதி பால் கொள்முதல் விலை உயர்விற்கு பின் கடந்த 1 வருடத்தில் வைக்கோல், சோளதட்டை, உலர் தீவனங்கள் விலை இருமடங்கு உயர்ந்துவிட்டது. தொழிலாளர்கள் தினக்கூலியும் ரூ.200 ல் இருந்து300 ஆக உயர்ந்துவிட்டது.புண்ணாக்கு ரூ.27 ல் இருந்து 32 ஆகவும், கருக்கா தவிடு ரூ.5.50 ல் இருந்து 8.50 ஆகவும் உயர்ந்துவிட்டது. 1 லிட்டர் பால் உற்பத்தியில் கலப்ப தீவனங்கள் செலவே 70 சதவீதம் ஆகிவிட்டது. தற்போது பாண்டிச்சேரியில் ரூ.2 ம் கேரளாவில் ரூ.3 பால் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளனர்.

எனவே தமிழக அரசும் பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.6 ம், எருமைப்பாலுக்கு ரூ.8 ம் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்.தற்போது கர்நாடாவில் பால் கொள்முதல் விலையை உயர்த்தாமல் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.4.50 வரை மானியமாக வழங்குகிறார். இதற்கென அந்த அரசு ஆண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கியுள்ளது. கேரளாவில் ரூ.3.50, பாண்டிச்சேரியில் ரூ.2.50 ம் மானியத்தொதை தருகிறார்கள்.அதுபோல் தமிழக அரசும் மானியத்தொகையாக லிட்டருக்கு ரூ.4..50 வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி ஒன்றியத்தில் பிரத சங்கங்களுக்கு சுமார் 80 நாட்கள் பால் பணம் நிலுவை உள்ளது. சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு 50 நாட்கள் பால் பணம் பட்டுவாடா செய்யாமல் நிலுவை வைத்துள்ளது. இதே போல் விழுப்புரம் ஒன்றியத்திலும் பால் பட்டுவாடா பணம்

நிலைவையில் உள்ளது. இதையும் தீர்க்க வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்த தமிழக முதல்வர் எங்களது சங்க மாநில பிரதிநிதிகளை அழைத்து கலந்து பேச வேண்டும். இன்று(நேற்று) நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தாவிட்டால் உண்ணாவிரதம், மாவட்டம்தோறும் அரசு அலுவலகங்கள் முன்பு தர்ணா மற்றும் மறியல் போராட்டம் அல்லது சென்னையில் பேரணி நடத்தலாம் என 3 விதமான கருத்து உள்ளது. எந்த போராட்டத்தை மேற்கொள்வது என்பதை மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து எங்களது சங்க நிர்வாகிகளின் கருத்தை கேட்டு ஒரு மாதத்திற்குள் அறிவிப்போம்.

கிராமங்களில் அரசு 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் ரூ.100 கூலி தருகிறது. அந்த வருமானம் கூட பால் உற்பத்தியாளர்களுக்கு இல்லை. விவசாயிகளுக்கு இலவச மோட்டார் தருவதாக சொல்கிறார்கள். கிணற்றில் தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை மோட்டார் கொடுத்த என்ன ? பயன். மக்கள் கேட்காமலே ஒரு ரூபாய் அரிசி, கலர் டி.வி.,கேஸ் அடுப்பு என இலவசமாக தருகிறார்கள். ஆனால் பால் கொள்முதல் விலையை உயர்த்த மறுக்கிறார்கள். பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தாவிட்டால் போராட்டம் நடைபெறும் அது பற்றி விரைவில் அறிவிப்போம். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாநில பொதுச்செயலாளர் ராஜேந்திரன், சட்ட ஆலோசகர் வாழப்பாடி ராஜேந்திரன் உள்பட பலர் உடனிருந்தனர்.